ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2363/88 - 2023 දෙසැම්බර් මස 23 වැනි සෙනසුරාදා - 2023.12.23

2363/88 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/HAR/4/2/1/51.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/9/2017//WS/589.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2332/42 ஆம் இலக்க 2023.05.19 ஆந் திகதியின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிகளுக்கு உரிமை கோருபவரோ அல்லது வேறு தொடர்புகள் இருப்பதாக கூறுகின்ற சகலரும் தாமாகவோ அல்லது அவர்களின் கடிதம் மூலம் அதிகாரம் உள்ளவர்களாகவோ இருப்பின் 2023.07.19 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என்னைச் சந்திக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு குறிப் பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரம் 2024.02.21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு என திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

மொஹான் தர்மதாச,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
ஹாரிஸ்பத்துவ,
குருநாகல் வீதி,
நுகவெல,
2023, திசெம்பர் 15.

EOG 12 - 0367

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் இல.: 4-3/9/2014/WS/233.
எனது குறிப்பு இல.: KMB/LAN/ACQUI/02/60.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் கபுறுபிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் இல. 317 - B, கரகொட உயன்கொட கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும் கடஸ்டர் பட இல. 820244 இல் வலய இல. 3, தாள் இல. 1 இல் காட்டப்பட்டுள்ள கீழே குறிப் பிடப்பட்ட காணித்துண்டின் விபரம் :

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர் : நுகேஹேன அல்லது அலுத் தெனியேகனத்த; விபரம் : வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தைக் கொண்டது; உரிமை கோருவோர் : பணிப்பாளர் நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தலைவர், பல்கலைக்கழக ஒதுக்கீட்டு ஆணைக் குழு; விஸ்தீரணம் : 0.0253 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு கபுறுபிட்டிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குசலக நாணாயக்கார,
பிரதேச செயலாளர்,
கபுறுபிட்டிய.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கபுறுபிட்டிய,
2023, திசெம்பர் 20.

EOG 12 - 0368